தொடுவானம்



ஆசுகவி,

ஆராவமுதன்.

"வெளியீடு"

தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம்,

நெய்வேலி-1.

2481

தொடுவானம் பற்றி....................

சில வார்த்தைகள்!

மகாகவியின் விழாவில்
ஆசுகவிக்குப் பாராட்டு!

சாதாரண பாத்திரப் படைப்புகளில் ஞானவசியத்தை உள்ளடக்கியவை இப்பாடல்கள்.

ஆழ்ந்த சிந்தனையுடன் நோக்கினுல்தான் இதன் ஆழம் புரியும்.

சிதம்பர ரகசியத்தைத் திடீரெனக் காட்டுவதுபோல், தொடுவானத்தைக் காட்டுகிறோம்.

இத்தொகுதியை அச்சிட்டு வெளியீடு செய்வதன் மூலம் உளுந்தூர்பேட்டை கவிஞர் மன்றக்கிளை பெருமை எய்துகிறது.

குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுதவிய மூர்த்தி மின் அச்சக உரிமையாளர் திரு. E. நரசிம்மன் அவர்கட்கு எமது நன்றி!

இன்னணம்,

சீராளன். சிவப்பிரகாசம் M.A;B.Ed.
தலைவர்

அரி. இல. தமிழடியான்,
செயலர்.

முத்து. அண்ணுமலை,
பொருளர்.

மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டக் கவிஞர்கள்.

அச்சமைப்பு:
இளஞ்சித்திரன்.

பாடல் வந்த பாதை

நாட்டில் மக்கள் தொகையைவிட ஒருவர் அதிகம் இன்று கவிஞர்களின் எண்ணிக்கை. அரசர்களும் சிற்றரசர்களும் பல்கி இருந்த இடைக்காலத்தில் கவிஞர்கள் தொகைக் குறைவு. எனவே, அரசர்கள் பெயர்களை விட, கவிஞர்களையும் அவர்களது சாம்ராஜ்யமாம் கவிதைகளையும் இன்றும் காண்கிறோம்.

காலம் கவிஞர்களின் புகழுக்கு ஒரு கருவி!

காப்பியக் காலம் கம்பனுக்கும், வில்லிக்கும் ஆயிரக்கணக் கான விருத்தமரங்களைத் தந்தது.

சங்க காலம் யாதும் ஊரே யாவரும் கேளீர் என ஒரே வரியால் கணியன் பூங்குன்றனுருக்கு சாகா உடல் தந்தது.

பக்திக்காலம் ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் கோயில் சிலைகளாக்கி, கவிதைகளை நிரந்தரமாக்கியது.

இடைக்கால ஜமீன்களின் சிற்றிலக்கியக் காலம் கூளம நாகேந்திர பூபதிகளுக்கு பள்ளியறை இருட்டு, சுகநூலாம் விறலி விடுதூது எழுத சுப்ரதீபக் கவிராயர்களை அனுப்பிவைத்தது.

அன்னியர்காலம் ஜோசப் பெஸ்கியின் மூலம் தேம்பாவனி யைத் தந்தது.

சுதந்திரப் போராட்டம் பாரதியையும், மூட நம்பிக்கை ஒழிப்பு பாவேந்தரையும் தந்தது.

யுகப் புரட்சியாக விஞ்ஞான யுகம், பேசும் படத்தின் மூலம் கண்ணதாசனை கவியரசாக்கியது.

இவற்றுக் கிடையில் வாழ்ந்து வரும் நுண்மா நுழைபுலம் படைத்த சுரதாவால்கூடப் பொதுப்புகழை ஒரு நடிகனது அறி முகத்தை, ஐந்தாண்டுகள் மட்டுமே பத்திரிக்கையில் அடிபடும் அமைச்சர் அளவிற்கானப் புகழைப் பெறமுடியவில்லை. நமக்குத் தொழில் கவிதை என்னும் நன்நெஞ்சங்களில் மட்டுமே காலி செய்ய முடியாத வீடாக அவர் குடி இருக்கிறார்.

நவயுகத்தில் குறிப்பாகக் கவிதைத் துறையில் புகழ் பெறுவது என்பது முயற்கொம்பே.

கவிதையும் அதன் வடிவத்தில் மாறிவிகிடுறது.

யமகங்கள், திரிபுகள், சமஸ்த்காரங்கள் வேண்டாம், பொது மக்களுக்குப் புரியும் வண்ணம் இருக்கவேண்டும் எனக் கேட்கப் போய் பாரதி தோன்றினார். ஆனால், இன்றோ சந்தம், எதுகை மோனை வடிவம் எதுவும் வேண்டாம். உரைநடையிலே ஏதேனும்

வியப்பான உணர்வுடன் கூடிய செய்தியைச் சொன்னால் போதும். அதுவே கவிதை எனத் தொடங்கி, எங்கேனும் தவறியும் எதுகையோ, மோனையோ ஒத்த ஓசையோ வந்து விட்டால் அது கவிதை இலக்கியத்திலிருந்து தவறிவிட்டது எனும் அளவிற்கு கவிதையின் வடிவம் கெட்டு விட்டது.

ஐந்தங்க நாடகதாரியான ஷா தனது நாடகத்தின் அளவை விட நெடிய முன்னுரை தருவார். நாடக சிறுகதை பாணியில் அமைந்த இக்கவிதைகளுக்கு நானும் அப்படிப்பட்ட முன்னுரை தர வேண்டியது அவசியமாகிறது.

ரசிகர்கள், இளவரசர்களின் அணிவகுப்பு. கவிதை, சுயவரத்தில் மாலை சூடவரும் இளவரசியைப் போன்றது. முன்னுரை இணைப்புரையாற்றும் நுணுக்கமான சேடியைப் போன்றது.

எழுதியவர்கள் அவர்களுக்கே உரிய ஏற்ற இறக்கத்தோடு படிப்பதுவே, வேற்று மொழியைக் கலந்து பிற மொழி எழுத்துக் களையே சேர்த்து எழுதுவதே சிறப்பு எனும் நிலைக்கு மரபுக் கவிதை அறிவந்தவர்களே செல்கின்றனர்.

எத்தனையோ வழிகளில் மொழிக்கு ஆகாதென செய்து வரும் பத்திரிக்கைகளும் இவ்வசன கவிதை கங்கணம் கட்டிக்கொண்டு விதிவிலக்குகளையே விதியாக நிர்ணயித்து ஏழு வரிகளில் புதுக் கவிதை எழுதுங்கள் எந்த இலக்கணமும் வேண்டாம், பரிசு பத்து ரூபாய் என்ற அரிப்பு அறிவிப்புகள் வெளியிடுகின்றன.

கவிதையில் பொருட்சுவையோ, சரியான முரண்தொடை. எல்லா வசதியும் படைத்தவர்கள் ஏழ்மை என்னவென்றே தெரியாத் வசதியாளர்கள் ஏழைக்காக முதலைக்கண்ணீர் வடிப்பதே இன்றைய நாகரீகக் கவிதை, முற்போக்குக் காவியம். இல்லாமையை அழச் சொல்லுவது ஒரு புதிய புகழ்ப் பாதை.

இறைவனைப் பற்றியோ, ஒழுக்கம் பற்றியோ நாட்டன்பு, மொழியன்பு பற்றியோ இன்று பாடுவது பத்தாம் பசலித்தன மாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் மரபுவழிக் கவிதை எழுதுபவர்கள் தாங்கள் கிழட்டு நடிகர்களாகிவிட்டோம் என்று உணரத் தலைப்பட ஆரம்பித்து விட்டனர்.

எந்த நாட்டிலும், எந்த மொழியிலும் எந்த காலத்திலும் புதுமை மோகம் இல்லாமல் இருந்ததில்லை. ஆனால் பழமையின் சுகத்தை, நளினத்தை சங்கப் பாடலை காப்பியங்களை, தனிப்பாடல் களை எந்த மொழியும் குறிப்பாக தமிழ் என்றும் இழக்காது.

இன்று மரபுக் கவிதையின் நயமும், புதுக் கவிதையின் உணர்வும் பின்னிப்பிணைய புதுமைப் பொருளில் மரபு வழியில் எழுதுபவர்களே ஏதேனும் காலத்தால் நிற்கும் செயல்களைச் செய்ய முடியும்.

கவிதை கவிதைக்காகவே என எளிமையாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் என்றுமே தமிழில் இல்லை. The art for art's sake என்னும் நிலையை ஆங்கில இலக்கியத்துறையில் காண்கிறோம்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி காலத்திலும், ஏன்? ஷெல்லிதாசன் எனப் பெயர் இட்டுக்கொண்ட பாரதி கூட இவ் வகைக் கவிதைகளை மொழி பெயர்த்திருக்கிறார்களே ஒழிய, தாமாக மிக அதிகம் படைக்கவில்லை. பைரனின் "The Bull" போல 'வேர்ட்ஸ் ஒர்த்தின்' "The leach gathered" போல Gracy-ன் "The elegy written in the country church yard" போல தமிழில் தேடுகிறேன் அரிதாக இருக்கிறது.

அறிவியலால் தூரச் சுருக்கத்தையும் நேரச் சுருக்கத்தையும் பெற்றுள்ளது மானுடம், உலகத்தை கடல்கள் வேண்டுமாகில் கண்டங்களாகப் பிரிக்கலாம், இலக்கியத்தையோ கலையையோ பிரிக்க இயலாது. எனது ஆங்கில இலக்கிய உணர்வே இவ்வகை தமிழ்க் கவிதைகளுக்குக் காரணம் என நான் உணர்கிறேன்.

தொடுவானம் :

குணச்சித்திரத் தொகுப்பாக மட்டுமின்றி இது ஒரு மனச்சித்திரத் தொகுப்பாகவும் இருக்கவேண்டுமென்பதால் இதனை இதனில் தொகுக்கிறேன். காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை. வானத்திற்கும் மண்ணுக்கும் உள்ளக் காதலைப் பாடி இடைப்பட்ட எல்லாக் காதலையும் இதற்குள் அடக்குகிறேன். *1959 டிசம்பர் 14ம் நாள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எழுதியது இக் கவிதை பாரதி மட்டும்தான் வேதாந்தமாக சற்றே விரிந்துரைக்க வல்லிரேல் யாதானும் கூறுங்கள் என்று கூறமுடியுமா? வானும் இருக் கிறது, மண்ணும் இருக்கிறது. இக்கவிதைக்கு எப்படி வேண்டுமானாலும் பொருள் சொல்லுங்கள். நதிமூலமும், ரிஷிமூலமும் தானா கண்டுபிடிக்க முடியாது? கவிமூலமும்தான் !*

தோன்றியநாள் முதலாகப் பார்த்துப் பார்த்துத்
　　தொகைமூச்சு விடுகின்றேன்! மண்மகள் உன்
நீண்டநெடும் மேனியினை அலைத துப்பும்
　　நிலமெனும் கடலாடை தன்னை, உச்சி
பூண்டபனி இமயமெனும் நெஞ்ச மேட்டைப்
　　பூரிப்பில் பார்க்கிறேன். மாதே! வான
ஆண்டகைநான் முகம்பார்த்துப் பார்த்துப் பார்த்தே
　　அயர்கின்றேன் நீயும்தான் ஏங்குகின்றாய்!

தாபமெனும் தாகத்தால் நீயு லர்ந்தால்
தண்ணீராம் மழைக்கண்ணீர் நான்வி டுப்பேன்!

பாபமென்ன? செய்திட்டோம் நம்கா தல்தான்
பார்வையிலே இச்சென்மம் கழித்து விட்டோம்

சாபமெனும் மேகங்கள் இடையில் வந்தும்
சமர்மனிதர் மரமாக தடுத்த போதும்

ஆபத்தாய் நான்அஞ்சேன் திசைகள் தோறும்
அயராமல் உனைதொடர்ந்து பார்த்தி ருப்பேன்!

ஓயாமல் சுற்றுகிறாய் முதுமை யென்னும்
உணர்வில்லை உன்முகத்தில்! காதல் நெஞ்சன்

பாயாமல் பார்த்திருக்கக் கண்டு வானப்
பாவியையாய் காதலித்தோம் என்று மாதே

வாயார பூகம்ப வெடிப்பு திர்ப்பாய்
வயதில்லை காதலுக்கு! பொறுத்திருப்போம்

மாயாத மண்மகள்நீ மண்ட லங்கள்
மதிக்கின்ற வான்மகன்நான்! தெய்வ நாதன்!

விடுகதையாய் நினைக்கின்றார்! மனித ரெல்லாம்.
விவரமிலா அவர்ப்பார்வை தன்னால் என்னைத்

தொடுவானம் என்கின்றார்! நானே உன்னைத்
தொட்டதில்லை இதுவரைக்கும். மௌனம் விட்டேன்

இடியோசை குரல்கொடுத்தும் பயனென் றில்லை!
என்னைவிட உயர்ந்தவர்கள் எங்கும் இல்லை!

அடிமனத்துக் காதலிது தோழி! என்றும்
அழியாத காதலது வென்ற தில்லை!

வான்நிலவு வளர்ந்தாலென் தேய்ந்தால் தான்என்?
வன்கதிரின் உதயத்தால் அத்த மத்தால்

மீன்இனங்கள் கண்சிமிட்டும் பரிக சிப்பால்
மெல்லியலே நம்காதல் மறக்கப் போமா?

தேன்வண்டின் காதலல்ல மரணம் தீண்டும்
தினக்காதல் நொடிககாதல் அல்ல! நில

வான்காதல் மண்காதல் நேசப் பாங்கீ
வளர்காதல் நம்காதல் சாகாக் காதல்!

சின்னசாமி காவியம் :

மனிதன் என்று தோன்றினானே அதற்கு முதல் நாள் மது தோன்றி இருக்க வேண்டும்.

அதிலிருந்து மானுடம் மீளவேண்டுமென சொல்லாத கவிஞர்கள் இல்லை.

வள்ளுவன் தொடங்கி அதனை ஒழிக்க முயன்று தோற்றவர்கள் தொகையோ மிக அதிகம்.

அலாவுதீன் கில்ஜி மதுவிலக்கு நடைமுறை படுத்திய போது உடைத்து ஊற்றிய சாராயம் ஊரில் அடைமழை பொழிந்ததுபோல் ஆறாக ஓடியதாம்.

பாபர் இனிமேல் மது அருந்துவதில்லை என மதுக் கோப்பையை உடைத்து சத்தியம் செய்த பிறகே, இப்ராகிம் லோடியை வென்றார்.

மகாத்மா காந்தி வாழ்வெல்லாம் இதற்காகவே போரடினார் ஆனால் எரிகின்ற நெருப்புக்கு இடையில் எத்தனை நாள் கற்பூரம் தீப்பற்றாமல் இருக்கமுடியும் என்ற சௌமியனுக்குப் பின் வந்த சாதாரணன் மதுவிளக்கை 1975ல் விலக்கி வைத்தார் (அண்ணாவின் பிறந்த வருடம் சௌமிய அதற்கு அடுத்த வருடம் சாதாரண)

ஆனால் இதனையும் ஒரு காரணமாகப்பற்றி ஆட்சிக் கட்டிலேறி சிலகால மதுவொழிப்பாக தன் மதுவிலக்கு முயற்சியில் தோற்றார் எம். ஜி. ஆர்.

ஆனால் எல்லாக்காலங்களிலும் முகமூடியுடன் நாட்டில் இருந்து வந்த கள்ளச் சாராயத்தால் சீரழிந்த குடும்பங்கள் தான் எத்தனை ஆயிரம்.

தடை செய்யப்பட்ட ''கொக்கு பறக்குதடி பாப்பா'' பாடலின் ஆசிரியரான உடுமலை கவி பூமிபாலகதாஸ் அவர்கள் முதல் முதலில் மது ஒழிப்புச்செய்தபோது மது அரக்கன் மாண்டதால் கொள்ளி வைக்கிறேன் என மொட்டை அடித்து மீசையை எடுத்துக் கொண்டது மட்டுமல்லாமல், புருவ முடியையும் எடுத்துக் கொண்டாராம்.

குடிக்காதே என ஒரு சொல் ஏவல் அல்லது வியங்கோல் நீதியைவிட ஏப்படி ஒரு சிந்தனையானது வாழ்க்கை ஆலாபனை அறிவார்ந்த அலையுணர்வு மோகனராகத்தில் தொடங்கி சரணத்திற்கு முன்பே முகாரிக்கு வந்து வட்டது என காரண காரியத்துடன் மதுவின் கொடுமையை மீட்டிக்காட்டுவதே இம்மது மகா காவியம் அல்லது வரைவன் கு. சின்னசாமி மான்மியம் எனும் இக்கவிதை.

நாடெங்கும் இப்படிப்பட்ட எத்தனையோ நல்லவர்களை கலைஞர்களை சிந்தனைச்சிற்பிகளை மதுவரக்கன் குடித்திருக்கிறான்.

ஆனால் சின்னசாமியின் வாழ்க்கையை, ஓவியமாக அல்ல சற்றும் கற்பனை கலவாத புகைப்படமாக தந்திருக்கிறேன் நான்.

சின்னசாமியை அறிந்த ஊரார் கவிதையை மிக அதிகமாக ரசித்தனர்.

மதுவையும் மரணத்தையும் பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை. ஆனால் இரண்டிற்கும் என்றும் மரணம் இல்லை. நானும் என் பங்கிற்குப் பாடுகிறேன்.

(கலிவெண்பா)

வேப்பமரக் காற்றடிக்கும் விண்வெளியின் இருள்கிழித்து
ஆப்பம்போல் ஒளிவட்ட ஆதவனும் புறப்படுவான்

உலகம் விழிக்கும் ஊர்வனவும் நடப்பனவும்
கலகலப்பில் ஆழும் காய்கறிகள் கடைதிறக்கும்

ஊரே விழித்தாலும் ஒருஜீவன் விழிப்பதில்லை
பாரை மறந்து படுத்திருக்கும் வேதாந்தி

கல்லை நடுவிருக்கும் கல்விக்கூ டம்உயர்ந்த
பள்ளிக்கூ டம்தன்னைப் பள்ளிகொளும் கூடமென

ஆக்கித் துயிலும் அத்வைதப் பெருஞ்சித்தன்
தேக்க மதுமகிழ்ந்துத் திளைத்துத் தனைமறந்து

தூக்க மதுமகிழும் துறவி பெருந்துறவி
வண்ணத்தைத் தொட்டு வடிக்கும் கலைவிட்டு

கிண்ணத்தைத் தொட்டிங்குக் கீர்த்தியினைத் தொட்டமகன்
சின்னச்சா மியென்னும் சிறப்பிமிகு சாமியவன்

எண்ணம் மறந்ததொரு ஏகாந்தப் பெருஞ்சாமி
மாமாங்கம் முன்னலிம் மகராசன் பேருருவம்

காமாசம் சொட்டுமெழில் காந்தநிலாப் பேருருவம்
ஆசையைத் தூண்டும் அழகான இருகோட்டு

மிசை யழகும்சீர் மெல்லாடை வெள்ளாடை
ஓசை நடங்கொண்ட உயர்ந்தநடைப் பேச்சழகும்

தானே எழுதியபல் தமிழ்மேடை நாடகமும்
தேனே எனஇனித்துக் திக்விஜயம் கொண்டவைகள்

ஈரோட்டுப் பாதைவிட்டு இன்றுவரை மாருமல்
போராட்டம் பலகண்ட புரட்சிக் கனல்நெருப்பு

திருப்பாவை பஜனைசெய் திருக்கூட்டம் முன்னாலே
தெருவெல்லாம் இராவணனின் திகழ்பஜனைப் பாடியவன்

இந்திக்குக் கொடும்பாவி இழுத்து வழிநடையாய்
சென்னைவரைச் சென்று சிறைப்பட்ட பெருந்தொண்டன்

அன்னாளில் மும்முனைப்போர் ஆர்வத்தால் செய்ததனுல்
சின்னச்சே லத்துரயில் சிறகொடிக்கச் சென்றதனுல்

பொன்ராம கிருஷ்ணனுடன் புனிதன் சிறைச்சென்றான்
அந்தநாள் பெருமைகளோ ஆயிரமாம் ஆயிரமாம்

திருக்குறளை முப்பாலும் தித்தாமல் சொலும்புலவன்
வரைவன் எனப்புதிய வார்த்தைசொலும் மொழியறிஞன்

அடடாஓ! அடடா அவனு இவனென்று
தடுமாற வேண்டுமித் தமிழ்மகனை இன்றுகண்டால்

அன்றுடக் கூலியைப்போல் அலைந்து பணந்தேடி
இன்றும்இம் மாலைமணி ஏழுக்குச் சரியாக

தேவரசம் காமரசம் தித்திக்கும் சோமரசம்
பாவரசம் தொட்டவுடன் பாரைச் சுழற்றுரசம்

ஆராய வேண்டாத ஆசைப் பெருரசமாம்
சாராய ஜீவநதிச் சங்கமத்தில் நின்றிருப்பான்!

எண்ணெய்த் துணியைப்போல் இடுப்பிலொரு கந்தையுண்டு
பின்னற்கால்! கண்சிகப்புப் பெரும்மயக்க வெள்ளோட்டம்

போதை மயக்கப் புரள்வார்த்தை ஒன்றறியான்!
மாதர் மயக்க மருளநம்வழி போயறியான்!

சிங்கமென நடந்தமகன் சிறுத்து மிகவொடுங்கி,
அங்கம் சுருங்கி, அலைவோய்ந்த கடல்போல

யாரு மிலாயிடத்தில் இருகை தலையணையில்
தேர்வந்து நின்றதுபோல் திருவிழிகள் மூடிடுவான்!

ஓ! ஓ! மதுவே! ஓ! உல்லாசத் தேன்மதுவே
சாவுக்குப் பாதைசொலும் சண்டாளத் தூதுவனே!

8

உந்தன் மயக்கில் உற்றுபெற்ற பிள்ளைகளின்
தொண்டையில் கால்வைத்தத் துணைவர் பலருண்டு!

மல்லிகைப்பூ வண்டுவிழி மாதரார் தாலியெலாம்
மில்லியென வந்து மெதுவாக வாங்கிவிட்டாய்

சித்தத்தில் ஒழுக்கச் சீர்பெற்ற வாலிபரை
மெத்தைக் கழைத்து மென்றதுவும் நியன்றோ

விஸ்கிரம் ஜின்னென்ற வேதனைந் தோழியரே
முஸ்லிம் மதுக்கவிஞன் மோகனஉ மார்கையாமைத்

தள்ளாட வைத்தழகுத் தத்துவங்கள் சொன்னவரே!
கள்ளக்கண் அடித்துபெருங் காவியங்கள் படைப்போரே!


கலைஞன் ஒருவனையும் கைப்பிடிக்குள் சிறைவைத்தீர்
கலைஞன் ஒருவனுமைக் கைப்பிடிக்குள் சிறைவைப்பான்

ஒட்டாண்டி ஆனவர்கள் உளத்தில் அமைதிவர
ஓட்டெடுப்பு நேரத்தில் உமக்குயாம் ஓய்வுதந்தோம்

ஏழடுக்கு மாளிகையில் ஏகாந்தம் காணுங்கள்
ஏழைச் சிரிப்பிற்கு இடையூறாய் வாராதீர்!

சின்னச்சாமிபோலச் சிங்காரச் சாமிகளை
இன்னும் பலராக இங்காக்க வேண்டாம்நீர்!

ஓ! ஓ! ஓ! பேய்மதுவே! உயிர்குடிக்கும் பானகமே
போவாய்நீ போவாய்நீ போ.



விடியலில் தேநீர் கொடுக்கும் வி. ஆர். கண்ணன்.

வாழ்க்கையின் அனுபவங்களும் சம்பவங்களின் எதிரொளியுமே இலக்கியமாகிறது. கதா பாத்திரங்கள் யதார்த்தமாக நம்முடன் இருப்பவையே.

உலகம் அறிந்த தலைவர்களையும், சிந்தனையாளர்களையும், கலைஞர்களையும் கவிதையில் பாடுகின்ற தமிழ் இலக்கியத்துறையில் நான் அன்றாடம் சந்திக்கும் தொழிலாளியைப் பற்றி வாழ்க்கைச் சக்கர வர்ணனை செய்கிறேன். நின்றுகொண்டிருக்கும் மண்ணைப் பாடாமல் என்றும் தொடமுடியாத வானத்தை மட்டும் பாடிப் பயன்னென்ன?

இப்பாடல் பெற்ற கண்ணனைப்போல் ஊர் தோறும் பலர் இருக்கலாம். அவர்களெல்லாம் இக்கவிதைக்கு நாயகர்களே. சகடயோக ஜாதகம் என்பார்களே அது இவரது வாழ்க்கை. எத்தனை ஏற்ற இறக்கங்கள்.

இவரை என் சிறு பிராயம் முதல் நான் நன்கு அறிவேன். நீதியை நினைத்தவுடன் கண்கள் கட்டப்பட்டு கையில் திராசுடன் பறக்கும் நீதிதேவதை எவ்வாறு நினைவுக்கு வருமோ அப்படி தேநீரை நினைத்தவுடன், டீ ஆற்றிக் கொண்டிருக்கின்ற இக் கண்ணனின் வடிவம் என் நினைவுக்கு வரும்.

கவிதையை எழுதி அரங்கேற்றிய பின்புதான் இது ஒரு கண்ணன் பாட்டாக இருப்பதை நான் உணர்ந்தேன்.

டீ அடித்தே, நெருப்பை நேராக எடுக்கும் முரடுகட்டிய அவரது கரங்கள்

எப்போதும் இடுப்புக்கு மேல் வரை மடித்துக்கட்டிய வேட்டி முகமலர்ந்த அவரது மோகனப்புன்னகை என்னை நெடுநாளாக கவிதை எழுதத் தூண்டியது.

ஆனல்

தூக்கம் வரா ஒரு கவிதை வெறி இரவுக்கு கண்ணன் தலைப்பானதை கண்டேன்.

விடியலில் தேநீர் கொடுக்கும் வி. ஆர். கண்ணன்.

அம்பாரி யானை அழகு மணிமகுடம்
உம்பாரெனப் பல்லக்கும் ஒய்யாரப் பெருவாழ்க்கை
தங்கத்தால் காளாஞ்சி தரையெல்லாம் பளிங்குமணி
சிங்கமென ராஜாங்கச் சீலருக்கும் சிலகாலம்!
அங்கத்தில் உருத்துகின்ற ஆடையன்றி பிறிதில்லா
பொங்கும் வறுமைநாள் புலரும் ஒருநாளில்
இங்கிந்த வாழ்க்கையிலே இரண்டையும் ஒன்ருகச்
சிங்கமென ஏற்று சிரிக்கின்ற நபருண்டா?
வாழ்ந்தால் பெருவாழ்வு வாழ்க்கையெனும் பள்ளத்தில்
தாழ்ந்தால் பெரும்பள்ளம் தாளுக வந்தாலும்
அத்துவிதத் துறவியைப்போல் அனைத்தும் சமமாக
சித்தத்தில் ஏற்றிங்கே சிரிக்கும் மனிதருண்டா?
உண்டென்று காட்ட ஒருவருண்டு அவர்தாம்இக்
கண்ணனெனும் வி. ஆர். கே! காந்தச் சிரிப்பழகர்!
நெடும்புகழ் வன்னெஞ்சூர் நெய்யும் குடிபிறந்து
விடியலெதும் வாழ்க்கையில் வெகுநாள் அவதியுற்று
சிற்ருளாய் டீக்கடையில் சேர்ந்து படிப்படியாய்
உற்றமகன் கபிலன் உயர்பெயரில் உணவகத்தைத்
தொடங்கித் தொடர்கதையாய் தொகைதொகையாய் பொருள்சேர்த்து
அடைமழைபோல் புகழை அடைந்த அருங்கண்ணன்
ஸ்ரீதரன் டாக்கீசின் சிங்கார எதிர்புறத்தில்
ஆதிநாள் இவர்ஒட்டல் அற்புதத்தை யார்மறப்பார்?
ரொட்டிசுவை கறிஅருமை! ருசிமிகுத்த பிரியாணி
இட்டம்போல் அலங்காரம் எப்போதும் வியாபாரம்!
அன்ருடம் ஓரழகு ஆச்சரிய செலவினங்கள்
ஓயா ஒலிபெருக்கி ஒய்யார மேசையுடன்
சாய, சுழல, சரியான நாற்காலி!
நீட்டுவோர்க்கு நன்கொடைகள்! நீர்போல் நெடுஞ்செலவு!
நாட்டிலே இல்லாத நாணயத் தொழிலாளர்
கண்ணனைப்போல் கூலிதந்தோர் காசினியில் ஒருவரில்லை!

உயர்ந்து வருநிலையில் ஒருகடை போதாமல்
அயலிருக்கும் கடையெல்லாம் ஆசையில் தான்நடத்தி
உள்கடை திரையரங்கில் உடும்புப் பிடியாகி
கள்ளக் குறிச்சியுள்ள கடையெல்லால் தன்கடையாய்
ஆக்க முயற்சித்தார் அத்தனையும் வைத்திழந்தார்
வந்த வழிதெரியும் போனவழி தெரியவில்லை!
கண்ணன் வறுமைசொன்னுல் கண்ணீர் வருமெவர்க்கும்!
குன்றுபோல் செல்வஃதான் குவிந்திருக்கும் வேளையிலும்
ஒன்றுமில்லை என்றவர்தான் உதறிவிட்ட போதினிலும்
கண்ணன் மனநிலைமை கலங்கா துணிவுடைமை
தன்னடக்கம் அன்புடைமை தளராத புன்சிரிப்பு
மரியாதைக் குரியாரை மதிக்கும் தனித்தன்மை
பிறர்பொருள்மேல் ஆசையிலா பேராண்மை, தயாளகுணம்
அரிய ஒழுக்கம் அவனியிலே யார்க்குவரும்?
குடிப்பதனுல் தன்குடியைக் குடைசாய்த்தோர் பலருண்டு
அடிக்கின்ற சீட்டாடி அடிபட்டோர் பலருண்டு
இன்னதெலாம் தீண்டாத இனிய குணக்கண்ணன்
எண்ணிக்கை மிகுந்த இனிய குழந்தைகளும்
இன்முகம் சோர்ந்த இளைத்த மனையாளும்
வந்ததெலாம் தோற்ற வலிய வறுமையதும்
சொந்தமெனக் கொண்டு சுழலில்ஓர் படகானுர்!
இரயில்இஞ்சின் போன்றதொரு ராசி பைலரில்லை!
ஆள்மறையத் தக்கபுகழ் அண்டாக்கள் ஒன்றில்லை!
தோள்கொடுத்தத் தொழிலாளர் தொகையில்லை பறந்துவிட்டார்!
இருந்ததெல்லாம் கண்ணனது கையிரண்டும் புன்னகையும்!
பிரிதொன்றும் இல்லையங்கு பேச்சில்லை எப்போதும்!
கல்லாவில் அமர்ந்திருந்து காசாண்ட தெலாம்மறந்து
எல்லையிலாத் தொல்லையினில் எடுத்தார் மறுபிறவி!
அலுமினியப் பாத்திரங்கள் அதிர்ஷ்டத்தின் தேவதைகள்!
கலகலப்புப் புன்சிரிப்பு கண்ணன்கை டீயமுதம்
எங்குசென்று வைத்தாலும் எறும்பாகத் தொடர்மனிதர்
தங்கமன கண்ணன்கை தண்ணீரை டீயாக்கும்!

மனிதர் முகங்கண்டால் மயக்கமே பிறக்கும்!
சர்க்கரையே இலாமனிதர் சர்க்கரை தூக்கல்சில
அக்கரையாய் காசளிப்போர் அருந்தியபின் கடன்சொல்வோர்!
வாங்குவோர் கூட்டலிலே வகையாகப் பொய்சொல்வார்
தூங்கினுல் டீகிளாசும் தொகையும் சுருட்டுபவர்!
எத்தனைஸ்பூன் போட்டாலும் இனிக்கச் சுவைபார்த்து
தித்திப்பே இல்லையென தினம்மீண்டும் நீட்டுபவர்
அத்தனைக்கும் மனம்சலியா அசையா மனிதரென்ருல்
இத்தரையில் கண்ணனன்றி யார்பிறக்க இனிமுடியும்!
செவிகள்பழு தானுலும் சேவைபழு தாகாமல்
தெவிட்டாத அமுதமெனத் தேனீர் தரும்கண்ணன்!
ஐந்தெப்போ தாகுமெனும் அலங்கார அம்மைமுதல்
உந்திவரும் ஏமப்பேர் ஊராட்சித் தொழிலாளர்
ஒரேநேரம் இருகாப்பி கேக்கும்நம் சிட்டிநாய்க்கர்!
கலைமன்னன் சுப்பையா! காண்ட்ராக்டர் கண்ணனின்னும்
சொல்லாமல் காத்திருந்து சுவைக்கின்ற மார்டன்சார்
பேட்டைவெல்லம் நடுவிருந்து பேசிமகிழ் இலக்கியத்தின்
ஆட்சிசெய்யும் டீப்பிரியர் அரும்பசலூர் ரகுமானும்
டம்ளர்கள் லோட்டாக்கள் தளராத சொம்புவகை
எல்லோர்க்கும் கண்ணன்தன் இனியகை டீயமுதம்
இல்லையென்ருல் வேலையதோ எந்நாளும் ஓடாது!
ஒரேஒருநாள் ஞாயிறும் ஓய்வேன் உனக்கென்றும்
வாடிக்கைக் காரர்களினுல் வாழ்த்ததனுல் கள்ளமிலா
கண்ணன் ஒருநூறு கவின்வருடம் வாழட்டும்
என்றும் நலத்தோடு இளவயதாய் இருக்கட்டும்!
வைரமணி மக்களது வாழ்வு மலரட்டும்!
கவிஞர்வந்தால் தனிக்கவனம் காட்டுகின்ற வி.ஆர்.கே
புவிமகிழ வாழ்க! பொலிவாக நீடூழி!
நீரதிகம் சேர்க்காமல் நெடுநேரம் நிற்காமல்
ஆரமுதன் குடித்த அழகான டீசுகத்தால்
பாரறியப் பாடினேன்இப் பாட்டு!

புது மீசைக்காரன் நிர்வாணப் படங்களை யாருக்கும் தெரியாமல் வரைந்து பார்த்து அழிப்பதைப் போல் 9-ம் வகுப்பில் படிக்கும்போதே இக்கவிதை உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு எழுதிய கவிதைகள் எழுதியவன் மட்டுமே படிக்க உதவின,

1969ல் இருந்து

காற்றிருக்கும் இடமெல்லாம் -என்
கவியிருக்க முயல்கின்றேன்.

எனும் உணர்வுடன் நமக்குத்தொழில் கவிதை எனச் செயல் படுகிறேன். பாடாத நாள் இல்லை. ஆனால் அவை காற்றிலும் ஆரவார கைதட்டிலும் அருகில் இருப்பவர் காதுகளிலும் கரைந்தன.

அகல் விளக்குதான் எனினும் சொந்தம்கருதி தென்னாற்காடு மாவட்ட தமிழ்க்கவிஞர் மன்றத்தினர் இமயமலையின் உச்சியில் ஏற்றிப்பார்க்கும் முயற்சியில் பாசமுடன் பட்டமளித்து இச்சிறு நூலை வெளியிட்டு மகிழ்கின்றனர்.

ஆணிவேராகிய பொதுச் செயலர் கவிஞர்தம் கவிஞர் சக்தி அவர்களுக்கும் கிளைவேர் கவிஞர்களுக்கும் அனைத்துக் கிளைகளுக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

புரோகிதனுக்குத் திருமணம் என்பதுபோல ஒவ்வொருவர் பெயரினை எழுதும்போதும் நினைத்துப்பார்த்து மகிழத்தக்க பட்டமளிக்கும் எனக்கு மன்றம் பட்டமளிக்கிறது. கல்லைக் கம்பனாகிய நான், இச் சடையப்ப வள்ளல்களை மறக்க மாட்டேன். வாழ்க தமிழ்! வளர்க இந்தியா!!

அன்பிற்கினிய,

கவிதாலயம்,
கள்ளக்குறிச்சி.

ஆநாவமுதன்,
தலைவர்.
தென்னார்க்காடு மாவட்டத் தமிழ்க் கவிஞர் மன்றம்.

அங்கம்மாள் மான்மியம்

நாரணன் படைத்த இந்த
 நாற்றிசை உலகில் தோன்றும்
காரணம் அரிய யோகக்
 கடுந்தவம் புரிவார் ஞானத்
தோரண முனிவர் பற்றில்
 தொண்டெலாம் புரிவார் ஆனல்
கீரனூர் அங்கம் மாள்போல்
 கீர்த்தியைப் பெற்றுர் இல்லை!

ஆணெலாம் மாமன்! பெண்கள்
 அத்தனை பேரும் அக்காள்!
யானென தென்னும் கோடி
 ஈசல்வாழ் உலகில் கொண்ட
பானையும் வயிற்றுக் கந்தல்
 பற்றையும் தவிற யாவும்
வீணென விடுத்தாள் ஞான
 விந்தையாம் தோற்றம் கொண்டாள்!

குருவிகள் சேர்ப்ப தில்லை!
 குந்திடும் சோம்ப லில்லை!
அருந்திறல் அங்கம் மாளும்
 அகப்படும் வேலை செய்வாள்!
தரும்சோறு திண்ணைத் தூக்கம்
 தனக்காகப் பிறநோக் கின்றி
நிரந்தரப் பறவை யானுள்
 நேசத்தாள் பின்ன கைப்பாள்!

சம்சாரம் துறக்க மாதோ
 தாலியோ ஏற்ரு ளில்லை!
இம்மையில் தனிம றந்தாள்
 என்பதால் மறுமை பற்றி
நம்பிக்கை இல்லை! தெய்வ
 நாமங்கள் அறிந்தா ளில்லை!
அம்மியாய் தனித்தி ருந்தாள்
 ஆகையால் குழவி இல்லை!

அகலிகை சீதை இன்னும்
 அரியநல் மாத ரெல்லாம்
இகத்தினில் அழகால் மற்ருேர்
 இதயமாம் சிறைகி டந்தார்
சுகஉடல் அழுக்கு நாற்ற
 சுதந்திரப் பெண்ணுள்! ஆண்கள்

அகவிரல் கூடத் தீண்டா
அணையாத கனல்நெ ருப்பு!
வைத்தியம் செய்து செய்து
வருந்தியும் தீராத் தொல்லை
பைத்தியம் பலநூ றுண்டு
பணங்காசு பதவி யென்று!
வித்தென அடக்கங் கொண்ட
வினோதத்தை அறியா மக்கள்

பைத்தியம் என்பர் மாதோ
பரிகாசச் சிரிப்பு திர்ப்பாள்!
ஊரிலே யார்செத் தாலும்
உறவுக்கு முன்னே ஓடி
நேரிய பாடல் சொல்லி
நெஞ்சத்தை நெகிழ வைப்பாள்!
சேரியின் பிணமோ ஐயர்
செட்டியார் பிணமோ இந்தப்

பாரினில் ஒன்றாய்க் காணும்
பான்மையை யாரே பெற்றார்!
மங்கையர் இந்த நாட்டின்
மன்மத இளைஞர் இன்னும்
திங்களில் சாவோம் என்று
தெரிந்தாலும் நெஞ்சம் கெட்டு
தங்கம்மாள் ஆசை கொண்டு
தரணியில் வாடு வோரே!

அங்கம்மாள் வாழ்வு கண்டே
அவணியில் வாழ்வோர் வெல்வீர்!
பிறந்தஊர் கதிருக் கில்லை!
பெய்மழை மேகம் எங்கும்
நிரந்தரக் குடியி ருப்பு
நிகழ்த்துவ தில்லை! பாபம்
மரணஊர் அன்றி அந்த
மங்கைக்குப் புகுமூர் இல்லை!

முரண்தொடை மாதுக் கிங்கே
மூலமும் முடிவு மில்லை!
அவள்செத்தாள்; பிணம்பின் செல்ல
அன்பினில் காத்தி ருந்தேன்!
தவநிலா விலாச மில்லை!
தண்ணொளி முகவி லாசம்
கவலையில் தேடித் தேடி
கவிதையில் பிடித்தேன்! மீண்டும்

எவரேனும் அங்கம் மாளை
எதிர்ப்பட்டால் எனக்குச் சொல்வீர்!

2481